Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி -19 | 05-11-2003 | புதன்கிழமை | ஓசை 260

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கனினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்

R.V.G.பந்தல் சேவை தர்மபுரம் | யாழ் சாலை. (சி-8689) கிளிநொச்சி.

## சனாதிபதி சந்திரிகா அதிரடி நடவடிக்கை

# மூன்று அமைச்சர்கள் பதவி நீக்கம்;

# பாராளுமன்றம் இரு வாரங்கள் ஒத்திவைப்பு!

## இரு அமைச்சுச் செயலாளர்களும் பதவி நீக்கம்

**சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் அதிரடி நடவடிக்கையாக மூன்று முக்கிய அமைச்சர்கள் பதவி நீக்கப்பட்டுள்ளதோடு, பாராளுமன்றமும் நேற்று முன்தினம் முதல் இருவாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நாட்டின் இறைமை, ஐக்கியத் திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பின் காரணமாக தேசிய ரீதியான சேவைகளைக்கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.**

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, மக்கள் தொடர் பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோரே பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களும் சனாதிபதி சந்திரிகாவால் பதவி நீக்கப்பட்டு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் அதி தீவிர பாதுகாப்பு நிலை



## அரச கட்டுப்பாட்டு ஊடகங்களின் தலைவர்கள் சனாதிபதியால் நீக்கம்

(கொழும்பு)

ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம், ஐ.ரி.என். தொலைக்காட்சி நிறுவனம், லேக்கவுஸ் நிறுவனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவர்களை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று பதவி நீக்கியுள்ளார்.

அத்துடன் இந்நான்கு நிறுவனங்களுக்கும் புதியவர்களை சனாதிபதி நியமித்துள்ளார்.

ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிசும், ஐ.ரி.என். தொலைக் காட்சி நிறுவனத்திற்கு நியூட்டன் குணசேகரவும், லேக்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அதிதீவிர பாதுகாப்பு நிலையிலிருக்க பொலிஸ், ராணுவத்துக்கு சனாதிபதி உத்தரவு

### பாராளுமன்றம் அரச ஊடக நிலையங்களுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

மூன்று அமைச்சர்களை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவி நீக்கம் செய்துள்ளதையடுத்து கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் அதிதீவிர பாதுகாப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு முழுவதிலும் அதி தீவிர பாதுகாப்பு நிலையில் இருக்குமாறு இராணுவத்தினருக்கும், பொலிசாருக்கும் உத்தரவிட்டுள்ளார். பொலிஸ் தரப்பில் பதில் பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வாவிற்கு இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன் பாராளுமன்றக் கட்டடத் தொகுதி உட்பட அனைத்து அரச கட்டடங்களுக்கும் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு சனாதிபதி இராணுவத்தளபதிக்கு உத்தர விட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இதனையடுத்து பொலிசாரினதும், இராணுவத்தினரதும் விடுமுறைகள் காலவரையறையின்றி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா உட்பட பல்வேறு நாடுகளுடன் ரணில் தொலைபேசி மூலம் உரையாடல்

### கூட்டமைப்பு, மு.கா.வுடனும் ஆராய்வு

வாஷிங்டனில் தங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்தவாறு தொலைபேசிமூலம் நாட்டின் தற்போதைய அரசியல் குழப்ப நிலை தொடர்பாக இந்தியா உள்ளிட்ட பல்வேறுநாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் நாட்டின் நிலைமை தொடர்பாக தமிழ் கூட்டமைப்பினருடனும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடனும் கலந்து பேசியுள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஏனைய அமைச்சுகளில் தொடரலாம்

சனதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட மூன்று அமைச்சர்களும் தம்வசம் உள்ள ஏனைய அமைச்சுப் பொறுப்புக்களை தொடர்ந்து வைத்திருக்க முடியும் ஆனால் இவர்கள் மீண்டும் சனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் பெற்றுக் கொள்ளவேண்டும் என அறிவிக் கப்பட்டுள்ளது. இது குறித்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று விடுக் கப்பட்டுள்ளது.

## ஐ.தே.க.பா.உ.களின் உதவியுடன் பொ.ஐ.மு.விரைவில் ஆட்சியமைக்கும்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச

ஐக்கியதேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் உதவியுடன் பொதுசன ஐக்கிய முன்னணி விரைவில் ஆட்சி அமைக்கவுள்ளதாக சிறிலங்காவின் எதிர்க் கட்சி தலைவர் மகிந்தராஜபக்ச தெரிவித்துள்ளார்

அதற்கான வல்லமையுடனும் தேவையான திட்டங்களையும் கட்சி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கரு ஜெயசூரிய தலைமையில் அமைச்சர்கள் கூடி ஆராய்வு

(கொழும்பு)

அமைச்சர் கருஜெயசூரிய தலைமையில் அவசரமாக அமைச்சர்கள் கூடி நேற்று நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழல் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரனை கொண்டு வருவது குறித்து ஆலோசிக்கப்பட்டு இது குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் இறுதி முடிவு எடுப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (32)

## புலிகளின் திட்ட வரைவு அர்த்தமுள்ள தொன்றாகும்

### ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக நகல் திட்டம் பற்றி தான் அர்த்தமுள்ள விளக்கத்தைக் காணக்கூடியதாகஉள்ளதாகவும், அதில்அவாகொண்டுள்ளதாகவும் ஐக்கிய அமெரிக்க பிரதிராஜாங்கச் செயலாளர் ரிச்சார்ட் ஆர்மிரேஜ் வாஷிங்டனில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். எந்த இடத்தில் குழப்பமும், பிரச்சினையும் காணப்பட்டாலும் அது மற்றைய இடங்களுக்குப் பரவக்கூடியது என்பது எங்களுடைய தந்திரோபாயமாகும்.

இலங்கையின் சமாதானத் திட்டத்தில் இந்தியா பங்குகொள்வதா என்பதை அது தீர்மானிக்க வேண்டுமென அவர் மேலும் கூறினார்.

எந்த விதத்தில் பங்களிப்புச் செய்வதென்று இந்தியா தீர்மானிக்க வேண்டுமென்றும், ஆனால், தீர்வில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 3 அமைச்சர்களின் பொறுப்பையும் நாட்டின் நலன் கருதியே பறித்தேன்



### சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

நாட்டின் நலன் கருதியும், பாதுகாப்புக் கருதியும் இம்மூன்று அமைச்சர்களின் பொறுப்பை நான் கையேற்றுள்ளேன் என மூன்று அமைச்சர்களின் பதவி நீக்கம் குறித்து சனதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தனது உரையில், நாட்டின் மக்களைப் பாதுகாப்பதற்கே இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். பல வருடங்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்மானம் எடுப்பதற்கு நான் பல தடவைகள் முயற்சி செய்து வந்துள்ளேன். இது சம்பந்தமாக பல

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

திருமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் கடலில் மூழ்கி போராளிஒருவர் சாவடைந்துள்ளார்.

மேஜர் அறிவுடை நம்பி/நந்தன் (சுப்பிரமணியம் லோகநந்தன், சாம்பல்தீவு திருகோணமலை) என்னும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஒரே நாளில் அடையாள அட்டை

# ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு இரு மாதங்களில் ரூ 35 லட். வருவாய்

(கொழும்பு)

ஒரே நாளில் அடையாள அட்டை சல், கால தாமதங்களை தவிர்த்துக் கொள்வது மட்டுமல்ல, ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு கடந்த இரண்டு மாதங்களில் 3.5 மில்லியன் ரூபா வருவாயாகக் கிடைததுள்ளது. என சம்பந் தப்பட்ட அதிகாரி ஒருவர் கூறி யுள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை உட்பட நாட்டின் பல பகுதிகளில் இருந்து தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு இந்த அலுவலகத்திற்கு பொது மக்கள் வரு கின்றனர்.

கடந்த இரண்டு மாதத்தில் 6,992 பேர் புதிதாகத் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

தற்போது தினமும் 300 விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுகின்றன.

## நாய்களின் தொல்லை

நெடுங்கேணி கடைவீதி, மீன் சந்தைப் பகுதிகளிலும், கனகராயன்குளம், புளியங்குளம் கடை வீதிகளிலும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பால் அதனை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் வவுனியா வடக்கு விசேட ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யுத்தத்தால் உடமைகளை இழந்தமைக்கான இழப்பீட்டிற்கு 32,000 குடும்பங்கள் காத்திருப்பு

## 30 குடும்பங்களுக்கே திறைசேரி நிதியளிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக உடமைகளை இழந்தவர்களுக்கான நஷ்டஈடுகளை வழங்க 900 மில்லியன் ரூபாவைப் புனர்வாழ்வு அமைச்சு திறைசேரியிடம் கோரியுள்ளது.

நஷ்டஈட்டுக் கென விண்ணப்பிக் கப்பட்ட 32,000 விண்ணப்பங்களில் 7,000 விண்ணப்பங்களே மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு நஷ்டஈடு வழங்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மேலும் 25,000 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவுள்ளன.

உடைமைகளை இழந்த வர்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் தாமதமாவது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் பிரதமர் அலுவலகத்திடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகப் பிரதமர் அலுவலகம் புனர்வாழ்வு அமைச்சிடம் விளக்கம் கோரியிருந்தது.

2003ஆம் ஆண்டுக்கென 57 மில்லியன் ரூபாவையே திறைசேரி வழங்கியிருந்தது. இத்தொகை சுமார் 30 குடும்பங்களுக்கே போதுமானது. நஷ்டஈடு கோரி விண்ணப்பித்தவர் களுள் 7000 பேரின் விண்ணப்பங் கள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு 7000 பேருக்கு வழங்க சிபாரிசும் செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் நஷ்ட ஈடுகளை உடனடியாக வழங்க முடியாதுள் ளது என்றும் புனர்வாழ்வு அமை ச்சு விளக்கம் அளித்துள்ளது.

இந்நிதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக அமைச் சரவைக்கும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு அமைச்சுக் கூறியுள்ளது.

உடைமைகளை இழந்தவர்களுக்குக் குடும்பம் ஒன்றிற்கு 1இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் நஷ்டஈடு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# துணுக்காய் வலய பாடசாலைகளில் மாணவர் கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

(மல்லாவி)

துணுக்காய் வலயப் பாடசாலைகளில் மாணவர்களின் கல்வி அடைவு மட்ட செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தரம் 02-05 வரையான வகுபபுக்களுக்கு வாரத்தில் 03நாட் கள் மேலதிக நேர வகுப்பும் மற்றும் மதிய உணவும் வழக்கப்படுகிறது இத்திட்டம் வலயத்திலுள்ள 49 பாடசாலைகளில் நடை முறைப் படுத்தப்படுகிறது.இவ்வகுப்புக்கான செயல் அட்டைகள், ஆசிரியருக் கான மேலதிக கொடுப்பனவுகள், பயிற்சிகள் என்பனவற்றை ஜி.ரி. இசட் நிறுவனம் வழங்குகின்றது.

தரம் 06-09 வரையான வகுப்புக்களில் துரித கற்றல் செயற்பாடுகளுக்கு அமைய தமிழ், கணிதம், ஆங்கிலம் ,விஞ்ஞானம் சமூகக்கல்வி ஆகிய பாடங்களுக்கு -பாடத்திற்கு 02மணித்தியாலம் கொண்ட வாரத்தில் 02நாட்கள் மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மதிய உணவும் வழங்கப்படுகின்றன.

ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணங்கள் பயிற்சிகள் போன்ற வற்றுக்கான செலவுகளை யுனிசெவ் நிறுவனம் வழங்குகின்றது.இத்திட்டம் தரம் -06 உம்06ற்கு மேற்பட்ட வகுப்புக்களை உடைய 27பாடசாலைகளில் நடைபெறுகின்றது.இது 04 மாதங்களுக்கு செயற்படுத்தப்படும் இவ்விரு திட்டங்களுக்குமான உணவுப் பொருட்களாகிய அரிசி, பருப்பு, திரிபோசாமா மற்றும் எண்ணெய் என்பன உலக உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. ஏனைய பொருட்களான தேங்காய், மரக்கறி, உப்பு, புளி என்பவற்றுடன் சமைப்பதற்கும் பெற்றோரின் உதவிகள் பெறப்படுகின்றது என்று துணுக்காய் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் விஜயபாலா தெரிவித்தார். (24)


**NORTHERN INISTITUTE OF TECHNOLOGY MANAGEMENT COMPUTER TRAINING CENTER - (PUTHUKKUDIYIRUPPU)**

**250 பேர் கொண்ட புலமைப் பரிசில் திட்டம்.**

*இத்திட்டத்தில் பொதுப் பரீட்சை மூலம் மாணவர்கள்தேர்ந்தெடுக்கப்படுவார்.*

**பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் கட்டணக்கழிவு வழங்கப்படும்.**

| புள்ளி | தரம் | கழிவுவீதம் |
|---|---|---|
| 90மேல் | A | 50% |
| 81-90 | B | 40% |
| 71-80 | C | 30% |
| 61-70 | D | 20% |
| ஏனையோர் | | 10% |

DIP IN MS OFFICE 2000XP

6 மாதம்

பரீட்சை:- பொது அறிவு , பொது உளச்சார்வு (1 1/2மணித்தியாலம்)
விண்ணப்பப்படிவம் ரூபா:- 200 செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

முடிவுத்திகதி :- 15.11.2003

விண்ணப்பம் கிடைக்கும் இடங்கள்

NITM Computer Training Center, Mallavi.

NITM Computer Training Center, Puthukkudiyiruppu.

(சி.7797)



கிளி/ மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

**மரவேலை, வானொலி, தொலைக்காட்சி திருத்துதல், வீட்டு மின் இணைப்பு தொழில் சார்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்**

*மேற்படி பயிற்சி நெறிகளுக்கு, 8ஆம் வகுப்பு வரையாவது கற்றிருத்தல் வேண்டும்.*

*பயிற்சிக் காலம் : 6 மாதம்*

*வயது : 18–40 இடைப்பட்டது.*

*மரவேலைப் பயிற்சி நெறிக்கு மட்டும் மாதாந்தம் இரண்டாயிரம் (2000 /= ) ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படும்.*

*பயிற்சி நெறிகள் பகுதி நேரத்தில் நடைபெறுவதால், வேலைக்குச் செல்வோரும் விண்ணப்பிக்கலாம்.*

*விண்ணப்பப்படிவங்கள் யாவும், சுயமாகத் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் 15–11–2003இற்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.*

முகவரி:

**அதிபர்,**
**தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்,**
**கிளிநொச்சி.**

(சி 8711)


## 15ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

தாயவளால் மண்ணில் 25 • 11 • 1951



கயவர்களால் விண்ணில் 05 • 11 • 1988

நாட்டுப்பற்றாளர்

**அமரர் சரவணமுத்து செல்வராசா (மாமா)**

(தென்மராட்சி பிரபல வர்த்தகரும், சாவகச்சேரி வர்த்தக சங்க முன்னாள் செயலாளரும்)

செல்வராசா வீதி நுணாவில் மத்தி சாவகச்சேரி

*தமிழன்னையின் விலங்குடைக்கும் வீரர் படைக்கு*
*தமிழுணர்வோடருகிருந்து உன் பணி தொடர்ந்தவனே!*
*தேன்மதுரத் தமிழைக் காத்திட துஞ்சுதலின்றி*
*நிதமும் உன் உழைப்பை அர்ப்பணித்தவனே!*
*பாரதப் படையின் பாதம் நக்கிய*
*பாதகரின் துப்பாக்கி வேட்டுக்கு இரையானவனே!*
*பாசத்திற்கு உறைவிடமான உன்னவர்களை*
*பாதியிலே பரிதவிக்க விட்டுச் சீட்டாகப் பறந்தவனே!*
*பேரது வாழும் பிரிய அன்புடனே*
*பேதிவானமின சுந்தோழும் அஞ்சலி உந்தனுக்கு*

தற்காலிக முகவரி:
116/2, தொட்டியடி, விசுவமடு,
முல்லைத்தீவு. (3832)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

பூவுலகில் 13 • 02 • 1945



விண்ணுலகில் 06 • 10 • 2003

***அமரர் சின்னையா பொன்னையா***

ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்
கொண்ட எங்கள் இதயத் தெய்வமே!
குடும்பத்தின் அன்புத் தந்தையே
குன்றாத குல விளக்கே - யாரும்
துன்புற்றால் ஓடித் துணைபுரிவார்.
தன்னினம் தன் சுற்றம் என்று அன்பாகப்
பழகி என்றும் அழியாப் புகழுடையார்
எந்தையே என்றும் எங்களை விட்டு
நீங்கள் பிரிந்து திங்கள் ஒன்று சென்றாலும்
நாம் வாழும் காலம் வரை எங்கள் நெஞ்சினில்
உறைந்திருப்பீர்கள் தந்தையே!
உங்கள்ஆத்மாசாந்திக்காகஇறைவனைப் பிரார்த்திக்கிறோம.

05–11–2003 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
கனகராயன்குளம்-தெற்கு.

(3724)

# பலஸ்தீன சமாதான முன்னெடுப்புகளை ஐ.நா.வின் கீழ் கொண்டுவர ரஷ்யா முயற்சி!

## இஸ்ரேல் பிரதமர் மொஸ்கோ பயணம்

**பலஸ்தீன நாடு உருவாக்கப்படுவதற்கும் இஸ்ரேல் மீது நெருக்கடிகளை ஏற்படுத்துவதற்குமாக ரஷ்யா ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானமொன்றைக் கொண்டு வரவுள்ளது. இது குறித்து அச்சமடைந்துள்ள இஸ்ரேல் தடுப்பதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.**

அமெரிக்கா முன்வைத்துள்ள பலஸ்தீனத்திற்கான சமாதான வழித்திட்டத்தின் படி பலஸ்தீன நாடு உருவாக்கப்படவுள்ளது. அமெரிக்காவின் இத்திட்டத்திற்கு ஐக்கியநாடுகள் சபை, ஐரோப்பிய யூனியன் அமைப்பு நாடுகளுடன் ரஷ்யாவும் ஆதரவு வழங்கி வருகின்றமை தெரிந்ததே.

அமெரிக்காவின் இந்த சமாதானத்திட்டத்தை ஐக்கியநாடுகள் சபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் வகையில் ரஷ்யா ஐ.நா.பாதுகாப்புச் சபையில் பிரேரணை ஒன்றை கொண்டுவர முடிவு செய்துள்ளது. ஐ.நா.வில் இது நிறைவேற்றப்படுமாயின் சில நிர்ப்பந்தங்களுக்கு கட்டுப்பட வேண்டிய கட்டாய நிலைக்கு இஸ்ரேலும் பலஸ்தீனமும் தள்ளப்படும். இஸ்ரேல் இது குறித்துக் கவலை கொண்டுள்ளது.

அத்தோடு, அமெரிக்கா முன்வைத்துள்ள சமாதானத் திட்டத்திற்கு இஸ்ரேல் ஏற்கனவே 14 திருத்தங்களை முன்வைத்துள்ளது. ரஷ்யாவின் இச் சமாதானத் திட்டம் ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்டால் இஸ்ரேல் முன்வைத்துள்ள திருத்தங்களுக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும் என்றும் இஸ்ரேலிய அரசு அச்சம் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அவசர அவசரமாக ரஷ்யா பயணமானார். மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் குறித்து அவர் ரஷ்ய சனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தினார்.

அமெரிக்கா முன்வைத்துள்ள சமாதானப் பாதைத்திட்டத்தை ஐநா. சபை கட்டுப்பாட்டி கீழ் கொண்டுவரும் ரஷ்யாவின் முயற்சிகளைக் கைவிடுமாறும் ரஷ்ய சனாதிபதி புட்டினை ஷெரோன் கோரியதாகவும் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க பயங்கரவாதத்திற் கெதிராக ரஷ்யாவுடன் ஒத்துழைக்கப் போவதாகவும் இதனடிப்படையில் ரஷ்யாவுடன் இஸ்ரேல் உளவுத் தகவல்களை பகிர்ந்து கொள்ள வுள்ளதாகவும் மொஸ்கோவில் இஸ்ரேலியப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## உறவை வளர்க்க முஷாரப் விருப்பம்

இந்தியாவுடன் அமைதிபூர்வமான உறவுகளை வளர்த்துக் கொள்ள பாகிஸ்தான் விரும்புகிறதென சனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்த விரும்பினாலும் காஷ்மீர் விவகாரத்தை ஒதுக்க முடியாதென அவர் மேலும் கூறியுள்ளார்.



வடக்கு மணிலாவிலுள்ள விமானப்படைத்தளமொன்றில் அமெரிக்க சுப்பர் ஸ்ராலியன் ரக உலங்கு வானூர்தியொன்றைக் கழுவும் அமெரிக்கப் பணியாளர்கள் (கூட்டுப் பயிற்சி ஒன்றுக்காக 500 அமெ.படையினர் பிலிப்பைன்ஸ் படையினருடன் இணைந்துள்ளனர்.)

# சுமாத்திராவில் பெரு வெள்ளம் 67 பேர் நீரில்மூழ்கி மரணம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் சுமாத்திராத் தீவில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கில் 67 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் ஐந்து பேர் வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் என இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இதனால்



வெள்ளப்பெருக்கில் சேதமுற்ற பூங்காவிடுதியொன்றை அவதானிக்கும் மீட்புப் படையினர்

உல்லாச விடுதிகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதுடன், பல மரங்கள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

# பாகிஸ்தானிடமுள்ள பகுதிகளை மீளப் பெறும்வரை காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வில்லை

## இந்திய அரசு வலியுறுத்து

பாகிஸ்தானிடமுள்ள காஷ்மீர் பகுதியை இந்தியா திரும்பப் பெறும்வரை காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியாதென இந்தியா வலியுறுத்தியுள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமித்த காஷ்மீர் இந்தியாவின் ஒரு இன்றியமையாத பகுதி என்றும் இப்பகுதி குறித்த பேச்சுக்கள் சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் நடைபெறும் என இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர் எல்லை கடந்த பயங்கரவாதத்தை பாகிஸ்தான் நிறுத்தினால் அன்றி அந்நாட்டுடன் பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பு இல்லையென கூறியுள்ளார். அத்துடன் இஸ்லாமாபாத்திடமிருந்து தகுந்த பதில் இல்லாத போதிலும் கூட இரு நாடுகளும் உறவு களை இயல்பாக்கிட புதுடில்லி தனது முயற்சிகளை மேலும் தொடரும் என கூறியுள்ளார்

### வெளியேற்ற நடவடிக்கை

அடுக்குமாடித் தொடரில் அமைந்துள்ள தமது வீட்டில் 150 பூனைகளை வளர்த்து வந்த முதிய தம்பதிகளை பிரிட்டன் அதிகாரிகள் அங்கிருந்து வெளியேற்ற தீர்மானித்துள்ளனர்.

மூன்று அறைகளைக் கொண்ட இவ் வீட்டில் பூனைகள் கட்டுக்கடங்காமல் பெருகியதைத் தொடர்ந்து முதியவர்களால் அவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வீடெங்கிலும் பூனைகளின் சிறுநீர் துர்நாற்றத்தை பொறுக்கமுடியாத நிலையில் விலங்குகளை பாதுகாப்பதற்காக போராடும் அமைப்பிடம் இவ் விடயத்தை கூறிய போது உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

# ஈராக் புனரமைப்பிற்கான நிதியை வழங்க செனட் அனுமதி

(வாஷிங்டன்)

ஈராக்கிலுள்ள தமது படைகளுக்கு உதவுவதற்காகவும், அந்நாட்டில் மேற் கொள்ளப்படவுள்ள புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காகவும் அமெரிக்க சனாதிபதி புஷ் கோரிய நிதியை வழங்குவதற்கு செனட் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

புஷ் 8750 கோடி டொலர்களைக் கோரியிருந்தார். மிகவும் பாரிய அவசரகால பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது. இப் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டிருப்பதன் மூலம் நீண்ட காலமாக தொடர்ந்த விவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் எண்ணெய் வருமானத்திலிருந்து கிடைக்கும் ஒரு தொகையை ஈராக் அமெரிக்காவிற்கு மீளச் செலுத்த வேண்டுமென வாதிட்டுள்ளனர்.

## ஒன்றிணைவு

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தலைமையில் செயற்பட்டு வந்த சமதாக் கட்சியும் சரத் யாதேவ் தலைமையில் செயற்பட்டுவந்த ஐக்கிய ஜனதாதளம் கட்சியும் ஒன்றாக இணைந்தன. இவ்விரு கட்சிகளின் இணைவையடுத்து இனி ஐக்கிய ஜனதாதளம் ஒன்றே அமைக்கப்படும். தலைவராக ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# முஸ்லிம் இளைஞர்கள் பாகிஸ்தான் படையெடுப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர் பகுதியிலிருந்து பாகிஸ்தான் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் முஸ்லிம் இளைஞர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித் திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டை விட தற்போது இளைஞர்கள் வெளியேறுவது அதிகரித்திருப்பதாக மாநில அரசின் அறிக்கை தெரிவிக்கின்றது.

தீவிரவாதிகளின் புனிதப்போர் என்ற வார்த்தையில் மயங்கி இளைஞர்கள் பாகிஸ்தானுக்குச் செல்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் முப்தி முகமது சயீத் அரசு பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்த நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

# ஆப்கானின் அரசியல் சாசனம் முற்றாக மாற்றியமைப்பு

## சனாதிபதிக்கு அதிக அதிகாரம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் புதிய அரசியல் சாசனம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இங்கு தலிபான் ஆட்சி கவிழ்க்கப்பட்டு இரண்டு வருடங்களாகிய பின்னர் இப் புதிய அரசியல் சாசனம் வெளியிடப்பட்டுள்ளது.

இச் சாசனத்திற்கமைய ஆப்கானிஸ்தானில் அடுத்த வருடம் தேர்தல் நடாத்தப்பட்டு சனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்படவுள்ளார். இத் தேர்தலில் தற்போதைய சனாதிபதியும் போட்டியிடவுள்ளார். அத்துடன் இஸ்லாமின் பெயரால் ஆப்கானிஸ்தானின் ஒருமைப்பாடும் இப் புதிய அரசியல் சாசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய இங்கு ஒரு துணை சனாதிபதி இருப்பார் எனவும், அதனால் பிரதமர் இருக்கமாட்டார் எனவும் கூறப்பட்டுள்ளது.

இச் சாசனத்திற்கமைய தேர்தலில் தெரிவு செய்யப்படும் சனாதிபதி முழு அதிகாரம் உடையவராக இருப்பார் என கூறப்பட்டுள்ளது.



கடந்த இருமாத காலமாக போக்குவரத்துக்குத் தடைவிதிக்கப்பட்டு தற்போது தடை தளர்த்தப்பட்டுள்ள நிலையில் காஸாப்பகுதிக்குள் செல்லும் பலஸ்தீன தொழிலாளர்கள்

# சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளின் போது உலகில் அமைதி பேண ஐநா ஊடாக முயற்சி

சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் வேளை உலகெங்கும் சண்டையில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் தமது மோதல்களை நிறுத்திக்கொள்ள வேண்டுமென ஐ.நா. சபையில் தீர்மானம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. டியூனீசியா என்ற நாட்டின் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் அப்துல்ரகீம் சோவாரி என்பவர் இத்தீர்மானத்தைச் சமர்ப்பித்துள்ளார். உலகில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பதே ஒலிம்பிக்போட்டிகளின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அடுத்த வருடம் கிரேக்கத்தில் நடைபெறும் ஒலிம்பிக்கில் இவ் இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே தனது அபிலாசையாகுமென ரகீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உயர் குருதி அமுக்கம்

இதுவோர் நாட்பட்ட நோயாகும். சீரான குருதி அமுக்கம் பேணப்படாதவிடத்து அதனால் பாரதூரமான உடலியல் தாக்கங்கள் ஏற்படலாம். எனவே வயதோடு அதற்குரிய குருதி அமுக்கத்தைப் பேணுவது நல்உடலாரோக்கியத்தைப் பேணுவதற்கு உதவும்.

சாதாரண குருதி அமுக்கம் 120/80

இது 110/70 தொடக்கம் 130/85 வரை சாதாரணமாகவே கருதப்படும்.

உயர்குருதி அமுக்கம் எனப்படுவது 140/90 மேலே குருதி அமுக்கம் செல்வதாகும்.

## உயர் குருதி அமுக்கத்தின் அறிகுறிகள்:-

அதிகளவு வியர்வை

தலையிடி

தலைச்சுற்று

நெஞ்சுப்படபடப்பு

மூக்கிலிருந்து இரத்தம் வடிதல்

வழமைக்கு மாறாக அதிகளவு சிறுநீர் இரவில் கழிதல்

மூச்சுத்திணறல்.

## உயர்குருதி அமுக்கத்திற்கான காரணங்கள்

உயர் குருதி அமுக்கத்திற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம்.

*பரம்பரைக் காரணிகள்

*மன உளைச்சல்

*அதிக உடற்பருமன்

*கொழுப்பு உணவுகள்

உதாரணம்: இறைச்சி வகைகள் குறிப்பாக மாடு, ஆடு,பன்றி முதலியன.

பொரித்த உணவுகள்

பட்டர்

மாஜரின்

*மதுபானம் அருந்துதல்

*புகைபிடித்தல்

*60 வயதிற்கு மேற்பட்டவர்கள்

*சலரோகம்

*இருதய நோய்கள்

*சிறுநீரக நோய்கள்

*அகம்சுரக்கும் சுரப்பி நோய்கள்

*சில மருந்து வகைகள்

## குருதி அமுக்கத்தைக் கட்டுப் படுத்தும் வழிமுறைகள்

I. உடல்நிறையைக் குறைத்தல்

a. உடல்நிறையைக் குறைப்பதற்கு ஒரு நாளைக்கு மூன்று முறை வழமையிலும் குறைந்த அளவு உணவு உண்ணுதல்.

b. அதிகளவு இனிப்பு, மாப்பொருள் உள்ள உணவுகளைத் தவிர்த்தல்.

உதாரணம்: கிழங்குவகை, இனிப்பு சோடாக்கள், குளிர்களி போன்றன.

c. அடிக்கடி உணவு உண்ணுவதைத் தவிர்த்தல்.

உணவில் அதிகளவு பழவகை, கீரை வகை சேர்த்தல்.

II. ஆடைநீக்கிய பாலைப்பருகுதல் (கொழுப்பற்றபால்)

III. அதிகளவு உப்புள்ள உணவுகளைத் தவிர்த்தல். உதாரணம்: கருவாடு, பொரித்த உணவு, ரின்மீன்

IV. உணவில் அதிகளவு உப்புச் சேர்ப்பதைத் தவிர்த்தல்.

V. கொழுப்புக் கூடிய (கொலஸ்திரோல்) உணவு உட்கொள்ளலைக் குறைத்தல்.

உதாரணம்: இறைச்சி, பொரித்த உணவு, பட்டர்வகைகள்.

VI. தேங்காய், தேங்காயெண்ணெய் பாவனையைக் குறைத்தல். தேவைப்படின் நல்லெண்ணையைப் பாவித்தல்.

VII. தினமும் உடற்பயிற்சி செய்தல்.

VIII. தினமும் ஓரளவு உடல் ரீதியான வேலைசெய்தல் உதாரணம் சைக்கிள் ஓடுதல், கூட்டுதல்.

IX. மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல் அல்லது அதற்குரிய நியம அளவில் எடுத்தல். உதாரணம் சராசரி ஆண் 21 Iu பெண் 18Iu வாரத்தில் எடுப்பது உடலாரோக்கியத்திற்கு உகந்தது.

X. புகைபிடிக்கும் பழக்கத்தைத் தவிர்த்தல்.

XI. மன அழுத்தத்துக்குரிய காரணத்தைக் கண்டு நிவர்த்தி செய்தல்.

XII. கோபப்படுதல், உணர்ச்சிவசப்படுதல் என்பவற்றை இயன்றளவு தடுத்தல்.

XIII கோப்பி, தேநீர் அருந்துவதைக் குறைத்தல்.

XIV தவறாது கிளினிக் சென்று மருந்துகளை வைத்தியரின் ஆலோசனைப்படி ஒழுங்காக எடுத்தல்.

## நோயாளிகள் செய்யவேண்டியவை

நோய்க்குரிய அறிகுறிகள் தென்படின் மருத்துவமனைக்குச் சென்று குருதி அமுக்கத்தை அளந்து தகுந்த ஆலோசனையை வைத்தியரிடம் பெறுதல்.

-சுதேச வைத்தியமுறைகளை நாடுவது, பொருத்தமற்ற சிகிச்சை முறைகளை நாடாதிருப்பது.

-ஒருநோயாளி இன்னுமொரு நோயாளியுடன் தனது குருதி அமுக்கத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதைத் தவிர்த்தல்.

-பாவிக்கும் மருந்து வகைகள் பற்றி குடும்ப அங்கத்தவர்களுக்குத் தெரியப்படுத்தி வைத்திருத்தல்.

-தவறாது கிளினிக் செல்லுதல்.

-நம்பிக்கையான ஒரு வைத்தியரின் ஆலோசனைப்படியே மருந்துவகைகளைப் பாவிப்பது.

-காலையில் தனக்குரிய மருந்தை உட்கொண்டபின்னரே சிகிச்சைக்குச் செல்லவேண்டும். இது மருந்து வகைகள் எவ்வளவிற்கு குருதி அமுக்கத்தைக் கட்டுப்படுத்தி வைத்துள்ளது என்பதை அறிய உதவும்.

## உயர் குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்படும் அங்கங்கள்

I. இதய சுற்றோட்டத்தைப் பாதிப்பதால்.

திடீர் மாரடைப்பு ஏற்படும் இதயம் செயற்படும் வீதம் குறைவடையும்.

II. மூளைக்குரிய குருதியோட்டம் பாதிக்கப்படுவதால் மூளைக்குரிய குருதிக்குழாய்கள் வெடித்து உட்புற குருதிப்பெருக்கமும், குருதியுறைதலும் ஏற்படுவதால் பக்கவாதம் ஏற்படலாம்.

III. சிறுநீரகம் பாதிக்கப்படுவதா ல். சிறுநீரகம் செயலிழத்தல் ஏற்படலாம்.

IV. கண்ணைப்பாதிப்பதால் பார்வை இழக்க ஏற்படலாம்.

குருதி அமுக்கத்தை கட்டுப்படுத்தி வயதிற்கு ஏற்ப சீராக்குவது பல்வேறு வகையான உடலுறுப்புக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கலாம்.

வைத்தியகலாநிதி பா.யூடிரமேஸ்ஜெயக்குமார்,
(மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி.)

# ஜப்பானிய நிதியுதவி திட்டத்தின் கீழ் 10 குளங்கள் புனரமைக்க ஏற்பாடு

சர்வதேச கூட்டுத்தாபன ஜப்பானிய வங்கியின் நிதி உதவியுடன் பீஸ்திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணத்தில் பத்துப் பிரதான நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக் கப்படவுள்ளன.

இதன் மூலம் இக்குளங்களின் கீழ் தற்போது நெற்செய்கை மேற்கொள்ளப்படும் விஸ்தீரணத்தை 2,870 ஹெக்டெயரிலிருந்து 6,595 ஹெக்டெயராக அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. நாட்டின் வடக்கு,கிழக்கு மாகாணத் திலேயே இத்திட்டம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப் படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இத்திட்டத்தின்கீழ் புனரமைக்கப்பட வுள்ள பத்து நீர்ப்பாசனக் குளங் களும் வருமாறு:-

திருகோணமலை மாவட்டம்- நீலப்பனிக்கன்குளம், மொரவேவா குளம், முல்லைத்தீவு மாவட்டம- தென்னியன் குளம், வவுனியா மாவட்டம- சேமமடுக்குளம், நீலி கைக்குளம், மாமடுவகுளம், மன்னார் மாவட்டம்- தெட்சணா மருத மடுக்குளம், அம்பாறை மாவட் டம்- பொறபொலகுளம், மட்டக்களப்பு மாவட்டம், புலுகண்ணாவகுளம், கிளிநொச்சி மாவட்டம்- அக்கரா யன்குளம்.

இக் குளங்களைப் புனரமைப் பதற்கும் திட்டத்தின் கீழ் நேரடியாக 11 ஆயிரத்து 276 குடும்பங்கள் பயனடைவார்கள் எனத் தெரியவரு கின்றது.

# துணுக்காய் வலயக் கல்விப் பணிமனைக்கு புதிய வாகனம் கிடைத்தது

துணுக்காய் வலயக் கல்விப் வலயப் பணிமனைக்கு 2003ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பழைய பிக்கப் வாகனத்திற்குப் பதிலாக புதிய பிக்கப் வாகனம் வட-கிழக்கு புதிய புனர்வாழ்வுத் திட்டத்தின் நிதி மூலம் கிடைத்துள்ளது. போக்கு வரவு வசதிகளற்ற பெரும்பாலான பாடசாலைகள் இங்கு உள்ளதால் அவர்களின் கல்விச் செயற்பாடு களை மேற்பார்வை செய்வதற்கும் ஊக்குவிப்பதற்கும், இப்புதிய வாக னம் கிடைத்ததாக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் விஜயபாலா தெரிவித்தார். (24)

# நட்டாங்கண்டல் கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேச நட்டாங்கண்டல் கிராமத்தில் கடந்த புதனன்று கிராம அ/திச் சங்கக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் மக்களுக்கு ஏற்பட்ட விவசாயம் சம்பந்தமான பிரச்சினை கள் ஆராயப்பட்டது. இப் பிரச்சினை களைத் தீர்க்கும் முகமாக பாண டியன் குளப்பிரதேச இணைப்பாளர் தனது கருத்துக்களை வழங்கினார். தொடர்ந்து பிரதேச இணைப்பாளர் சசிக்குமார் கருத்துக்களை வழங்கி னார். மற்றும் கமநல சேவை உத்தி யோகத்தர், கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப் பேரவை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (24)

# க.பொ.த.(சா/த) பரீட்சையில் சில பாடங்கள் மாணவர் சித்தியடையும் வீதம் தொடர் வீழ்ச்சி!

(கொழும்பு)

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களில் மாணவர்கள் சித்தியடையும் வீதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. கல்வியமைச்சு அண்மையில் மேற் கொண்ட ஆய்வின்படி 03 பாடங் களில் மாணவர் சித்தியடையத் தவறும் வீதம் படிப்படியாகக் கூடி வருகின்றது.

2001 ஆம் ஆண்டில் 66 சதவீத மாணவர்கள் ஆங்கில பாடத்திலும், 46 சதவீத மாணவர்கள் விஞ்ஞானப் பாடத்திலும் முற்றாக சித்தியடை யவில்லை.

2002 ஆம் ஆண்டில் 76 சதவீத மாணவர்கள் ஆங்கிலத்திலும், 60 சதவீத மாணவர்கள் கணித விஞ்ஞான பாடங்களிலும் முற்றாக சித்தியடையத் தவறியுள்ளனர்.

இதனை குறைப்பதற்காக கல்வி அமைச்சு புதிய உபாயமொன்றை எடுத்துள்ளது. நாட்டிலுள்ள அதிபர், ஆசிரியர்களை வெளிநாட்டிற்கு அழைத்துச் சென்று பல்கலைக் கழகங்களிலும், கல்வி நிலையங் களிலும் அங்குள்ள கல்வி முறை களை அறிமுகப்படுத்தவுள்ளது.

இதுவரை இலங்கையிலிருந்து 490 ஆசிரியர்களும், 458 அதிபர்க ளும் இத் திட்டத்தின் கீழ் வெளிநா டில் பயிற்சி பெற்றுள்ளனர். ஒருவ ருக்கு இத் திட்டத்தின் கீழ் ரூபா 4 இலட்சம் செலவு செய்யப்பட்டு வரு கின்றது.

# மல்லாவியில் பாடசாலை மாணவர்களுக்கு வீதியொழுங்கு தொடர்பான கருத்தமர்வு

## பாலிநகர் ம.வியில் நடைபெற்றது

(மல்லாவி)

வவுனிக்குளம் பாலிநகர் ம.வி மாணவர்களுக்கு வீதி போக்கு வரத்துத் தொடர்பான கருத்தரங்கு நடத்தப்பட்டது.

பாலிநகர் மகாவித்தியலய பொது மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் பாடசாலை மாணவர்களுக்கான வீதி விபத்து சம்மந்தமான கருத்தரங்கு பாலிநகர் பாடசாலை அதிபர் சுந்தரமூர்த்தி தலைமையில் நடை பெற்றது. இதில் துணுக்காய் காவல்துறை பணிமனைப் பொறுப்பா ளர் தி.பகிரதன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

இதில் குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் வீதிகளில் செல்லும் முறை சம்மந்தமாகவும்சாரதிகளில் மாணவர்கள் செல்லும் முறையும் வீதிகளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு நடவடிக்கையையும் வீதியில் அமைக்கப்பட்டுள்ள குறியீடுகளையும் கடைப்பிடித்து பாதசாரிகளுக்கு எவ்விதஇடையூறும் ஏற்படாத வண்ணம் நடந்து கொள் ளும் படி கேட்டுக் கொண்டார். (24)

# விளக்கமறியல்

ஏறாவூர் நகரில் மூன்று பேர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயம டைந்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்ட பிள் எதிர்வரும் 14ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்ட பிள் சம்பவவேளை கடமை முடித்து வீட்டுக்கு வழமை போல் சுயபாதுகாப்பிற் காக துப்பாக்கியு டன் வீட்டிற்கு சென்றிருந்ததாக அவர் மேலும் கூறினார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 3ம் திகதி இரவு இடம்பெற்ற இத்துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

# புலிகளின் திட்ட வரைவிற்கு எதிராக சந்திரிகாவின் நடவடிக்கை எத்தகையது!

இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான விடயத்தில் கடந்த வாரத்தின் இறுதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும், இனப் பிரச்சினையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கத் தக்கதுமான நிகழ்வு இடம்பெற்றது. தமிழ் மக்களின் சார்பாக விடுதலைப்புலிகளால், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான (ISGA) நகல் திட்டம் முன்வைக்கப்பட்டமையே இவ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

இவ்இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்ட வரைவானது வரலாற்று முக்கியத்துவம் பெறுவதற்கு இரண்டு முக்கியத்துவமான காரணங்கள் உண்டு.

1. விடுதலைப்புலிகள் இயக்கம் அரசியல் தீர்வு முயற்சிக்கான திட்டம் ஒன்றை முன் வைத்தமை.

2. தமிழர் தரப்பிலிருந்து ஒரு திட்டவரைவு எழுத்து வடிவில் முன்வைக்கப்பட்டமை.

விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியில் போராட்டத்தை ஆரம்பித்துக் கால் நூற்றாண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அரசியல் ரீதியான தீவு முயற்சி தொடர்பாகத் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். விடுதலைப்புலிகள் பல தடவை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தொடர்பாகப் பல தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருந்தும் இம்முறையே எழுத்து மூலமான தீர்விற்கான முன்னோடி நடவடிக்கை ஒன்றைப் பரிந்துரைத்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் இயக்கம் இத்தகைய தொரு முயற்சியில் ஈடுபடும் என அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கை எப்பொழுதுமே இருந்ததில்லை. அரசாங்கமே தீர்விற்கான நகல் திட்டங்களை முன்மொழிய வேண்டும். அவற்றில் அநேகமானவை விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் நிராகரிக்கப்படும். சில வேளை அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள முற்படும் என்பதே பலரது ஆரூடங்களாகவும் எதிர்பார்க்கையாகவும் இருந்து வந்துள்ளது.

இவ்வாறான எதிர்பார்க்கைக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பான அவர்களின் தவறான மதிப்பீடே காரணமாகும். அதாவது விடுதலைப்புலிகள் இயக்கம் அரசியல் ரீதியிலான தீர்வில் அக்கறை கொண்டதல்ல. சர்வதேச நிர்ப்பந்தங்கள் காரணமாகவே விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்துள்ளனர் என்பதே அவர்களது மதிப்பீடாக இருந்தமையால் அவர்கள் அத்தகைய முடிவைக் கொண்டவர்களாக இருந்தனர்.

ஆனால் கடந்த யூலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை விடுதலைப்புலிகள் நிராகரிக்காது அதற்கு மாற்றுத் திட்டம் ஒன்றை முன் வைக்கத் தயாரான போதே அசியல் வட்டாரத்தில் சற்று அதிர்ச்சி ஏற்படவே செய்தது. பின்னர் விடுதலைப்புலிகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமாகப் பலமான ஆலோசனைகள், கலந்துரையாடல்கள் நடத்திய போது விடுதலைப்புலிகள் காலம் கடத்த முற்படுவதாக ஒரு தரப்பு விமர்சிக்கவும் தொடங்கியது. ஆனால் தற்பொழுது விடுதலைப்புலிகள் இடைக்காலத் தன்னாட்சிக்கான அதிகார சபை ஒன்றை நிறுவுவதற்குத் திட்டம் ஒன்றை முன் வைத்தமை விடுதலைப்புலிகள் தொடர்பான மதிப்பீட்டைப் பலர் மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று.

அடுத்ததாகத் தமிழர் தரப்பிலிருந்து இடைக்காலத் தீர்வு மேலும் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பானதொரு நகல் திட்டம் முன்வைக்கப்பட்டு அதனடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்தச் சிறிலங்கா ஆட்சியாளர் அழைக்கப்பட்டுள்ளமையாகும். கடந்த காலத்தில் தமிழர் தரப்பு சிறிலங்கா ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பினும்-திட்டவரைவு ஒன்றை முன்வைத்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியதில்லை.

அதாவது அரசிற்கெதிரான தமிழர் தரப்புப் போராட்டங்கள் வலுவடையும் போது தமிழர் தரப்பு அப்போதைய தலைமைகள் அழைக்கப்பட்டுப் பேச்சுவார்த்தைகளை ஆட்சியாளர்கள் நடாத்தியதோடு, சில உடன்பாடுகளுக்கும் வந்திருந்தனரே ஒழிய-அவை பின்னர் கிழித்தெறியப்பட்டமை வேறுவிடயம்-தமிழர் தரப்பில் இருந்து தெளிவான திட்டவரைவு ஒன்று முன்வைக்கப்பட்டமை இம்முறையே ஆகும்.

இவற்றைக்கொண்டே புலிகள் முன்வைத்துள்ள திட்டவரைவின் வரலாற்று முக்கியத்துவம் புரியப்பட முடியும். இதேவேளை விடுதலைப்புலிகள் இயக்கம் அரசியல் தீர்வு முயற்சிகளில் முன்னேற்றகரமான நடவடிக்கைகளுக்குத் தயாராகவுள்ளனர் என்பதையும் எவரும் புரிந்துகொள்ளவும் முடியும்.

ஆனால், விடுதலைப்புலிகளினால் இத்தகையதொரு திட்டவரைவு முன்வைக்கப்படுகையில், சிறிலங்காவில் எழக்கூடிய உணர்வலைகள் எத்தகையதாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டவை பெரும்பாலும் மாற்றத்திற்குள்ளாகவில்லை. ஆனால், பிரதிபலிப்புக்கள் அதிக வேகத்துடன் வெளிவரவில்லை என்பது மட்டும் உண்மையே.

சிறிலங்காப் பிரதமமந்திரி ரணில்விக்கிரமசிங்க நாட்டில் இல்லாததன் காரணமாக இது தொடர்பான அவரின் அபிப்பிராயம் வெளியிடப்படவில்லை. ஆயினும் அவரின் சார்பாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் எச்சரிக்கை கலந்த ரீதியில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். தமது நகல் திட்டத்துடன் விடுதலைப்புலிகளின் நகல் திட்டம் முரண்பாட்டைக்கொண்டதாக இருப்பினும் அவற்றைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத்தரப்பு இத்தகையதொரு நிலைப்பாட்டை மேற்கொண்டமையானது எதிர்பார்க்கத்தக்கதொன்றே. ஏனெனில் அரசாங்கம் விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை முன் வைத்துப் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொள்ளும் நிலையிலோ அன்றி யுத்தத்திற்குச் செல்லும் நிலையிலோ இல்லை. எதற்கும் விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தை மேசையில் சந்திக்கவே அது விரும்புகின்றது. ஏனெனில் அதற்கான நிர்ப்பந்தங்களே அரசிற்கு உள்ளது.

ஆயினும்,அரசாங்கத் தரப்பு இந்நகல் திட்டவரைவில் திருப்தி கொண்டுள்ளதாக இல்லை என்பதற்கான சில சமிக்கைகளும் வெளிப்படாமல் இல்லை. குறிப்பாக நகல் திட்டம் வெளியிடப்பட்ட போது லண்டனிலிருந்த சிறிலங்காப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க இந்நகல் திட்டப் பிரதி ஒன்றை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரிடம் கையளித்து, முஸ்லிம் காங்கிரசின் திட்டவரைவைக் கோரியிருப்பதானது, விடுதலைப்புலிகளின் நகல் திட்டத்திற்கு மாறுபட்டதானதொரு நகல் திட்டத்தை வேறொரு தரப்பிலிருந்து பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர முற்படு நிற்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. அதாவது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் புலிகளின் நகல் திட்டத்தைச் சமர்ப்பித்தமை தவறு எனக் கொள்வதற்கில்லை. ஆயினும், மாற்றுத் திட்டம் கோரியமை பிரதமரின் எதிர்பார்க்கை குறித்துக் கேள்வியை எழுப்புவதாகவே இருக்கும்.

ஆனால்,பிரதமர் கைக்கொள்ள முயன்றுள்ள இராஜதந்திரமானது புதியதொன்றல்ல. இருதரப்பினர் பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருக்கையில், இது பலவீனமான தரப்பு மூன்றாம் தரப்பு ஒன்றையும் சம்பந்தப்படுத்திப் பிரச்சினையைப் பலவீனப்படுத்துவது வழி, வழியாக வந்த இராஜதந்திரமே. ஆகையினால், முஸ்லிம் தலைமையை இவ்விவகாரத்திற்குள் இழுத்துவிட ரணில்விக்கிரமசிங்க தமிழர் தரப்பைப் பலவீனப்படுத்த விளைந்ததன் வெளிப்பாடாகும்.

அரசாங்கத் தரப்பின் நிலை இவ்வாறானதாக இருக்கின்றமையால் எதிர்க்கட்சிகளிடமிருந்து பலமான எதிர்ப்புக் குரல்-அதாவது பிரதான எதிர்க்கட்சியான பொ.ஐ. முன்னணியிடமிருந்து- சந்திரிகா குமாரதுங்கவிடம் இருந்து இன்னமும் வெளிவரவில்லை என்றே கூறலாம். சிலவேளைகளில் இப்பகுதி வாசிக்கப்படும் வேளையில் அது வந்து கூட இருக்கலாம். குறிப்பாக இதனைப் பல பாரதூரமான அரசியல் விளைவுகள்கூட ஏற்படுவதாக இருக்கலாம்.

சனாதிபதி சந்திரிகா தனது எதிர்ப்பினை உடன் வெளியிடாது விட்டாலும் எதிர்ப்பை எவ்வாறு வெளிப்படுத்துவது என்பது குறித்து ஆட்சிக்குள்ளும் நெருக்கமான சக்திகளுடனும் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகின்றது. ஆயினும், உடனடியாக எதிர்ப்புக்களை வெளிக்காட்டாமைக்கு வேறு சில காரணங்கள் இருப்பதற்கு வாய்ப்புண்டு.



இதில் ஒன்று எதிர்ப்பை வெளிக்காட்டக் கூடிய முக்கிய அம்சத்தினை அன்றி வழிவகைகளைத் தேடிக் கண்டறிதலுக்கான கால அவகாசம் தேவையாக இருக்கலாம். அதாவது தமது எதிர்ப்பு நடவடிக்கை மக்களிடம் நியாயப்படுத்தப்படுதல் வேண்டும். ஆகையினால், பொருத்தமான காரணியும், பொருத்தமான வழிமுறையும் அவசியமானதாகின்றது. ஆனால், இத்திட்டத்தைச் சனாதிபதி சந்திரிகா எதிர்ப்பதற்குத் தயாராகி வருகின்றார் என்பதற்கு "தனது எதிர்பார்க்கையைவிடப் புலிகள் அதிகம் கோரியுள்ளனர்'' என்ற அவரது அபிப்பிராயமே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

பிரதான எதிர்க்கட்சியைவிட ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய போன்ற கட்சிகள் எதிர்பார்த்ததைப் போன்றே தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன. ஆயினும், இன்னமும் அடுத்தகட்ட நடவடிக்கையில் அவர்கள் இறங்கவில்லை. இதற்கு இன்னமும் கால அவகாசம் போதாமல் இருப்பதும் எதிர்ப்பு சக்திகள் இன்னமும் தமது எதிர்ப்பை முழு அளவில் வெளிக்காட்டாமல் இருப்பதும் காரணமாக இருக்கலாம்.

இதேவேளை சர்வதேச ரீதியிலும் விடுதலைப்புலிகளின் நகல் திட்டம் தொடர்பான உணர்வலைகள் சற்றுத் தாமதித்த நிலையிலேயே வெளிவந்துள்ளதாயினும்,புலிகளின் திட்டவரைவிற்கான ஆதரவான அன்றி அனுசரணையான கருத்துக்களே முதலில் வெளிவந்துள்ளன. குறிப்பாக ஐரோப்பிய யூனியன் இராஜதந்திர வட்டாரங்களும், அமெரிக்கத் தரப்பும் புலிகளின் திட்டவரைவை வரவேற்றுள்ளதோடு, பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இது வாய்ப்பளிக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் "பேச்சுவார்த்தைக்கான படிக்கட்டாகப் புலிகளின் நகல் திட்டவரைவு அமைந்துள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளது.

ஆயினும் புலிகளின் நகல் திட்டம் குறித்து இந்தியா இன்னமும் உத்தியோகபூர்வமான அறிவிப்பொன்றையும் வெளியிடவில்லை. ஒரு வகையில் மௌனம் சாதித்து வருகின்றது என்றே கூறலாம். இந்த வகையில் இந்தியாவின் மௌனம் இவ்விடயத்தில் இந்தியா,சிறிலங்கா அரசினதும் வெளியானது அபிப்பிராயத்தை எதிர்பார்த்திருப்பதாகவே இராஜதந்திர வட்டாரங்களிலும் அரசியல் நோக்கர்கள் மட்டத்திலும் கருதப்படுகின்றது.

ஆனால்,இந்தியா மௌனம் காப்பது போன்று இந்தியாவிலிருந்து வெளியாகும் விடுதலைப்புலிகளுக்கு விரோதமான நிலைப்பாட்டை நீண்ட காலமாகவே மேற்கொண்டுள்ள 'ஹிந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிகைகள் வழமை போலவே விடுதலைப் புலிகளின் நகல் திட்டமானது,தமிழீழத்திற்கான முதற்படியாக அமையக்கூடியவை எனத் தெரிவித்துள்ளன.

இதேவேளை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் புலிகளின் நகல் திட்டத்திற்குத் தெரிவித்துள்ள வரவேற்பும், இந்தியா காட்டிவரும் மௌனமும் சிறிலங்காவிலுள்ள எதிர்க்கட்சிகளுக்கு-குறிப்பாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தீர்மானம் மேற்கொள்வதில் சிறிது சங்கடத்தைத் தோற்றுவிப்பதாகவே இருக்கக்கூடியதொன்றாகும்.

ஏனெனில், சர்வதேச பரிமாணம் பெற்று விட்ட இனப்பிரச்சினை விவகாரத்தைப் பலம் பொருந்திய சர்வதேச நாடுகளின்/அணிகளின் பலமின்றி எதிர்ப்பதென்பது சாத்தியப்பாடானதாக இருக்கப்போவதில்லை என்பதும் எதிர்கால அரசியலுக்கு அனுகூலமானதாகவும் இருக்கமாட்டாது. ஆனால், சர்வதேச சூழ்நிலை தமக்குச் சாதகமாகும் வரை பொ.ஐ. முன்னணி காத்திருக்குமா என்பது சந்தேகமே.

ஆனால், இந்தியா இவ்விடயத்தில் கடைப்பிடிக்கும் மௌனமானது இவ் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான அங்கீகாரமாகவோ,அனுமதியாகவோ கொண்டுவிட முடியாது. இந்தியா இவ்விவகாரத்தை எவ்வாறு கையாள்வது என்பது குறித்துச் சிந்திப்பதற்கு எடுக்கும் கால அவகாசமாகவே கொள்ளத்தக்கதாகும்.

ஆகையினால் விடுதலைப்புலிகள் முன் வைத்துள்ள திட்டவரைவு தொடர்பான பிரதிபலிப்புக்கள் இன்னமும் முழு அளவில் வெளிப்படுத்தப்படவில்லை என்றே கொள்ளலாம். ஆனால், இது எதிர்க்கட்சியினால் எவ்வேளையிலும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புண்டு. ஆனால், இத்திட்ட வரைவைப் புறந்தள்ளுபவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் இனப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காண்பதில் அக்கறை அற்றவர்களாகவே இருக்க முடியும்.

**ஜெயராஜ்**

## மின்சாரம் தாக்கியதில் இளைஞர் பரிதாப மரணம்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி செலான் வங்கி ஊழியர் ஒருவர் நேற்று முன்தினம் காலை மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்துள்ளார்.

மேற்படி வங்கியில் எழுது வினைஞராகக்கடமையாற்றும் வவுனியாவைச்சேர்ந்த எஸ்.கிரிதரன் (வயது 21) என்பவரே உயிரிழந்தவ ராவார்.

மட்டக்களப்பு நகரிலுள்ள வங்கியின் விடுதியில் தங்கியிருக்கும் இவர் நேற்று முன்தினம் காலை விடுதிக்கு வெளியே வந்து பல் துலக்கிக்கொண்டிருக்கும்போது, தொலைக்காட்சி அன்ரெனா விழுந்து விடாமல் இழுத்துக்கட்டப்பட்டிருக்கும் கம்பியைப் பற்றிப் பிடித்துள்ளார். அன்ரெனாவில் கட்டப் பட்டிருந்த கம்பி அருகேயுள்ளமின் கம்பியுடன் ஒட்டப் பட்டிருந்த நிலையில் அதற்கூடாகப் பாய்ந்த மின்சாரம் இவர் மீது பாய்ந்ததால் இவர் மின் தாக்கலுக்கு இலக்கானார்.

## பேருந்து பள்ளத்தில் பாய்ந்ததால் 48 பயணிகள் படுகாயம்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியவில் நேற்று முன்தினம் அதிகாலை பேருந்து வண்டியொன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதில் 48 பேர் படுகாயமடைந்துள்ளார்கள். இதில் மூன்று பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகப் பொலிசார் கூறியுள்ளார்கள்.

எம்பிலிப்பிட்டியவிலிருந்து கொழும்பை நோக்கி வந்துகொண்டிருந்த எம்பிலிப்பிட்டிய மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்து நிலைய கடுகதி பேருந்து வண்டியே விபத்துக்குள்ளானது.

எம்பிலிப்பிட்டிய 92ஆம் கட்டைப் பகுதியிலேயே இந்தப் பேருந்து பாதையைவிட்டு விலகி50 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. பேருந்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே அது கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தை நோக்கிப் பாய்ந்ததாகச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சைபெற்றுவரும் பேருந்துச் சாரதி கூறியுள்ளார்.

இலங்கை அரசு வடக்கு- கிழக்கு மாகாணம் வடக்கு -கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம் கடன் இல: 2880 - சி.இ.(C.E)

தேசிய-போட்டிக் கூறுவிலை கோரல் நிர்மாண வேலைகள்

# கேள்வி அறிவித்தல் - ஐ.எவ்.பி (I.F.B)

**ஐ.எவ்.பி.இல: முல்/நீர்ப்/02** **திகதி 04 - 11 - 2003**

01) வடக்கு- கிழக்கு துரிதமீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D)கடன் வசதி, ஐ.டி.ஏ. (I.D.A) நம்பிக்கையின் கீழான வசதி.

02) அரசாங்க அதிபர், முல்லைத்தீவு, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

03) கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது முல்லைத்தீவில் மாற்றத்தக்கதான, அரசாங்க அதிபர், முல்லைத்தீவு என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 10.12.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04) ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களைப் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், முல்லைத்தீவில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம எந்திரி,**
**மாகாண கட்டடங்கள் திணைக்களம்,**
**பழையகமம், முரசுமோட்டை,**
**பரந்தன், கிளிநொச்சி.**

05) சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், அரசாங்க அதிபர், முல்லைத்தீவு என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டுப் பின்வரும் முகவரிக்கு 12.12.2003 பிற்பகல் 3.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**கேள்விச்சபை,**
**மாவட்டச் செயலகம், கச்சேரி,**
**முல்லைத்தீவு.**

அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.

06) வேறு விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்விக் குறியீட்டு இல | வேலை விபரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| முல்/நீர்ப்/கதி/2 | நிறைவேற்று எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் மீள் நிர்மாணம், முல்லைத்தீவு. | 42,800/= | 750/= | 04மாதங்கள் |
| முல்/நீர்ப்/பிசே/3 | பிரதேச செயலகம்,மீள் நிர்மாணம் முல்லைத்தீவு. | 150,500/= | 1000/= | 06மாதங்கள் |
| முல்/நீர்ப்/உவி/4 | உதவி விவசாயப்பணிப்பாளர் அலுவலகம் மீள் நிர்மாணம் முல்லைத்தீவு. | 156,600/= | 1000/= | 06மாதங்கள் |
| முல்/நீர்ப்/பிசே/5 | 20 பெண்கள் உத்தியோகத்தர்களுக்கான10அறைகள் கொண்ட கூட்டுவிடுதி மீள் நிர்மாணம்,முல்லைத்தீவு | 120,300/= | 1000/= | 05மாதங்கள் |
| முல்/நீர்ப்/பிசே/6 | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான விடுதி மீள் நிர்மாணம்,கச்சேரி, முல்லைத்தீவு | 104,400/= | 1000/= | 04மாதங்கள் |
| முல்/நீர்ப்/சுவே/6 | பிரதி மாகாண பணிப்பாளர் சுகாதார சேவைகள் அலுவலகம் மீள் நிர்மாணம், முல்லைத்தீவு | 210,900/= | 1000/= | 08மாதங்கள் |
| முல்/நீர்ப்/சுவே/7 | சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மீள் நிர்மாணம், முல்லைத்தீவு. | 154,200/= | 1000/= | 06மாதங்கள் |

07) கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புகள்04 பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒருதனி ஒப்பந்தத்துக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

**அரசாங்க அதிபர்,**
**மாவட்ட செயலகம்,**
**முல்லைத்தீவு.**

(தி-87/13)



**சிந்தனைக்கு**

விழிப்புத்தான் விடுதலையின் முதற்படி?

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 05-11-2003

## சமநீதி?

இனப்பிச்சினைக்கான அரசியற் தீர்வு பற்றிப் பேச்சுக்களில் ஒரு தரப்பு அரசியற் தீர்வானது சகல மக்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதாக அமைதல் வேண்டும் எனக் கூறுவதுண்டு. இக் கூற்றுக்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான ஆலோசனையா? முன்நிபந்தனையா? எனப் பகுப்பாய்வு செய்வது ஒருபுறம் இருக்க, இதனைப் பேசுபவர்கள் எதனைக் கூற விரும்புகின்றனர் என்பதும் கேள்விக்குரியதொன்றாகவே உள்ளது.

இனப்பிரச்சினை என்பது இலங்கையில் ஒரு தரப்பினர்–அதாவது பெரும்பான்மை இனமான சிங்களவர்கள் சிறுபான்மை இனமான தமிழ் மக்கள் மீது அரசியல்–பொருளாதார–இராணுவ ரீதியில் ஒடுக்குமுறைகளைக் கையாள முற்பட்டதன் விளைவே ஆகும். சுருக்கமாகக் கூறுவதானால் சம உரிமையையும்,சமவாய்ப்பும், சமநீதியையும் வழங்கத் தயாராக இல்லாததன் வெளிப்பாடே ஆகும்.

சிறிலங்கா ஆட்சியாளர்களை, தமிழ் மக்களை என்றுமே 'இந்நாட்டில' சம உரிமை உடைய பிரஜைகளாகக் கருதியதில்லை. பொருளாதார ரீதியிலான நடவடிக்கைகளில் இருந்து விளையாட்டுத்துறை வரையில் தமிழ் மக்கள் புறந்தள்ளப்பட்டே இருந்தனர். நீதித்துறை கூடத் தமிழ்' மக்கள் விவகாரத்தில் சமநீதி வழங்கியதாக இல்லை. தமிழர் மீதான ஒடுக்குமுறைக்கென விசேட சட்டங்கள் கூடக் கொண்டுவரப்பட்டதுண்டு.

மறுவளமாகக் கூறுவதானால், தமிழ் மக்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படாமையினால் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவே தமிழ் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பெரும்பான்மை இனத்தவர்கள் அநுபவிக்கும் உரிமைகள் பெறும் வாய்ப்புக்கள் தமக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரினர்.

சற்றுத் தெளிவாகக் கூறுவதானால், பெரும்பான்மையினரால் மறுக்கப்பட்டுள்ள, அன்றிப் பிடுங்கப்பட்டுள்ள தமது உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே போராட்டத்திற்கான அடிப்படையாகும். அதாவது எமது உரிமைகள் எமக்கு வழங்கப்படுதல் வேண்டும் என்பதே ஆகும்.

ஆனால், இதன் மூலம் தமிழ் மக்கள் பெரும்பான்மையினரின் உரிமைகள் எதையும் கோரவில்லை. அதாவது பெரும்பான்மையினர் தமிழ் மக்களுக்காக எந்தவித விட்டுக்கொடுப்புக்களையும் செய்ய வேண்டும் என எவருமே கோரவில்லை. மறுக்கப்பட்ட அன்றிப் பறிக்கப்பட்ட உரிமையை வழங்குமாறே கோருகின்றனர்.

இந்நிலையில்,இனப் பிரச்சினைக்கான தீர்வு சகல மக்களினதும் உரிமைகளையும் பாதிக்காத வகையில் அமைய வேண்டும் எனக் கோருவதானது எந்தவகையில் பொருத்தப்பாடானது. தமிழ் மக்கள் தமது உரிமைகள் அனைத்தையும் பெற்று வைத்துக்கொண்டு மற்றவர்களின் உரிமைகளில் பங்கு ஏதும் கோருகின்றார்களா?

இலங்கையில் தமிழ் மக்கள் மீது பாரபட்சம் காட்டப்படுகின்றது. தமிழர்கள் இன ரீதியில் புறக்கணிக்கப்படுகின்றனர், தமிழர் மீது இராணுவ அடக்குமுறை ஏவப்பட்டுள்ளது என்பது எல்லாம் புதிய விவகாரம் அல்ல. உலகிற்கு அதனைத் தற்பொழுது விளக்கிக் கூறவேண்டிய அவசியமும் இல்லை. இதுவரையில் இவை குறித்து வெளியான தகவல்களே போதுமானவையாகும். இதனை இதுவரையில் யாராவது ஏற்கத் தவறின் அவர்களுக்கு இது குறித்து விளக்கம் அளித்தும் பயனில்லை.

ஆகையினால், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ் மக்களுக்கான நியாயபூர்வமான உரிமைகளை வழங்குவதற்கானதே ஆகும். இதில் சிங்களப் பெரும்பான்மையினரிடம் இருந்தோ, பெரும்பான்மை இனத்துடன் சேர்ந்து செயலாற்றுபவர்களிடம் இருந்தோ எதையும் பறித்தெடுத்துத் தருமாறு கோரப்படவில்லை.

அதாவது வேறொருவரின் உரிமைகளைப் பறித்தெடுத்துத் தமிழருக்குப் பகிர்ந்தளியுங்கள் என்பதல்ல. தமிழ் மக்களிடம் இருந்து பறித்தெடுத்தவற்றைத் தமிழ் மக்களுக்குக் கொடுங்கள், வழங்குங்கள் என்பதே ஆகும். இதில், எவருக்கும் அநீதி இழைக்கப்படுவதற்கோ, மற்றவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதற்கோ வாய்ப்பில்லை.

ஆகையினால், ஏனைய இனங்களின் / சமூகங்களின் உரிமைகளும் பாதிக்கப்படாத வகையில் தீர்வு காணுதல் என்பது இனப்பிரச்சினைத் தீர்விற்கு அன்றித் தமிழ் மக்களின் உரிமைகளுக்குப் போடப்படும் முட்டுக்கட்டையாகவே கொள்ளத்தக்கதாகும். அதாவது இனப் பிரச்சினைக்கான அரசியற், தீர்விற்கு போடப்படும் முட்டுக்கட்டையாகவே இதற்கு அர்த்தம் கொள்ள முடியும்.

# சனாதிபதி எவ்வாறு நடந்துகொண்டாலும் நாம் மக்களின் தீர்ப்பையே ஏற்போம்

## அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க

(கொழும்பு)

சந்திரிகா கையெழுத்திட்டே எனக்கு சமுர்த்தி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. அது போலவே பாதுகாப்பு அமைச்சையும் பொறுப்பளித்தது, தற்போது அவர் பாதுகாப்பு அமைச்சு யாரிடம் இருக்க வேண்டும் என உயா நீதிமன்றிடம் வினாவுகிறார். அதற்கு உயர் நீதிமன்றம் எப்படி தீர்ப்பு வழங்கினாலும் நாங்கள் ஏற்க மாட்டோம் வேண்டுமாயின் என்னை நீதிமன்றத்துக்கு அழைக்கலாம். ஆனாலும் நாம் மக்களின் தீர்ப்பையே ஏற்றுக் கொள்வோம் எனக் கூறுவோம். நாம் மக்கள் ஆணையினாலேயே பதவிக்கு வந்தோம

இவ்வாறு கால்நடை அபிவிருத்தி சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஹபரதுவயில் வைபவரீதியாக நடைபெற்ற விதைப்பு நிகழ்வின் போது அவர் மேலும் கூறும் போது, 1994 ஆம் ஆண்டில் சந்திரிகாவுடன் இணைந்து தயாரித்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனியார் துறையினருக்கு நன்மை வழங்குவதாகவும் திறந்த பொருளாதார வளர்ச்சிக்கு மனிதாபிமான முறையில் இடமளிப்பதாகவும் சந்திரிகா தெரிவித்ததாகவும் பின்னர் ஒன்றையும் நடைமுறைப்படுத்தாமல் நிதியமைச்சுப் பதவியை கட்டிப்பிடித்துக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த ஆட்சிக் காலத்தில் மக்கள் நெருக்கடிக்குள்ளாகியிருந்தனர். சம்பள அதிகரிப்பு செய்யப்படவில்லை. வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படாது பொருளாதார ரீதியில் மக்கள் பெரும் சிக்கலை சந்தித்தனர்.

தற்போது எதிர்க்கட்சியினர் இவ்வாறு குறை கூறுகின்றனர் வெளிநாட்டவர்களுக்கு நாட்டை விற்பதாகவும் அரசைக் கலைக்க வேண்டும் எனவும் கூறினார்.

# இடைக்கால நிர்வாக யோசனைகளை மு.கா.அரசு புலிகளிடம் சமர்ப்பிக்க முடிவு

(கொழும்பு)

முஸ்லிம் சமூகசார்பான இடைக்கால நிர்வாக யோசனைகளை அரசிடமும்,புலிகளிடமும் சமர்ப்பிக்கப் போவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய வேளை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், புலிகள் சமர்ப்பித்த யோசனைகள் தமிழர்களின் நலன்களை ஆதாரமாகக் கொண்டவை. எனவே அவற்றை விமர்சிப்பதை விடுத்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அரசியல் கட்சிகளின் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி முஸ்லிம்கள் சார்பில் மாற்று யோசனைகளை சமர்ப்பிக்கப் போவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

அரசு முன்வைத்த யோசனைகளுக்கும், அதற்குப் பதிலாகப் புலிகள் தெரிவித்த மாற்று யோசனைகளுக்குமிடையே அடிப்படையான வேறுபாடுகள் இருப்பதை அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. அரசு-புலிகள்-முஸ்லிம் சமூகம் ஆகிய மூன்று தரப்பினரும் கலந்துரையாடுவதன் மூலம் வேறுபாடுகளை நீக்கிவிட முடியும் என ஹக்கீம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# போலி முகவர் நிலையம் நடத்தியவர் பல லட்சம் ரூபாய்களுடன் தலைமறைவு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளில் உயர் கல்வி வசதிகளைப் பெற்றுத்தருவதாகக் கூறி கண்டியில் போலி முகவர் நிலையம் நடத்தி வந்த முகவர் ஒருவர் 40ற்கும் அதிகமான இளைஞர்களிடம் பல இலட்சக் கணக்கான ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு அலுவலகத்தையும் வீட்டையும் மூடிவிட்டு தலைமறைவாகியுள்ளதாக கண்டி மோசடிக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிசார் கூறுகின்றார்கள்.

இங்கிலாந்து, கனடா,அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் உயர்கல்வி பெற்றுத் தருவதாகக் கூறியும், தூதுவர் அலுவலகங்களில் தமக்கு அதிக செல்வாக்கு இருப்பதாகவும் கூறி அலுவலகம் ஒன்றினை நடத்திவந்துள்ளார்.

இவ்வாறு பெரும் பணத்தைப் பெற்றுக் கொண்ட இப்போலி முகவர், இளைஞர்களை ஏமாற்றிவிட்டு திடீரென தம் அலுவலகத்தையும் அருப்பொலவில் உள்ள வீட்டையும் கைவிட்டுவிட்டு தலைமறைவாகியுள்ளார்.

# உயர் நீதிமன்ற நீதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டு; நீதித்துறையை அரசு ஏமாற்ற முயல்கிறது

## - சி.சு.கட்சி கண்டனம்

(கொழும்பு)

உயர் நீதிமன்ற நீதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டின் மூலம் ஐ.தே.மு. அரசு நீதித்துறையை அச்சுறுத்த முயல்கிறது என சிறில.சு.கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்காவின் பாதுகாப்புத் தொடர்பாக சனாதிபதியின் அதிகாரங்களுக்கு ஏற்ப தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியொன்றை சனாதிபதி வினவியது தொடர்பாக உயர்நீதிமன்றம் தமது கருத்தைக் கூறவிருக்கும் நிலையில் ஐ.தே.மு. அரசு உயர் நீதிபதியொருவருக்கெதிராக நடவடிக்கை எடுக்க எண்ணியிருப்பது நீதிச் சேவையை அச்சுறுத்துவதாகவும். அழுத்தம் கொடுப்பதாகவும் இருக்கிறது. இது ஐக்கிய தேசியக் கட்சியின் பாரம்பரையான செயல் என்றும் சுதந்திரக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

# இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியா தெரிவு விறுவிறுப்பான ஆட்டத்தில் நியூசிலாந்து தோல்வி

**T.V.S** கிண்ண முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி தனது 3வது வெற்றியைப் பெற்றதன் மூலம் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. நேற்று முன்தினம் புனேயில் நடந்த போட்டியில் ஆஸி அணி நியூசிலாந்து அணியை 2 விக்கெட்டுக்களால் வென்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது'.


259 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் அடுத்து' களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து' 49.5 ஓவரில் வெற்றியிலக்கை அடைந்தது.ஆஸி அணியின் வீரர் பிரட்வில்லியம்ஸ் சிறப்பாகப் பந்து வீசி 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

நியூசிலாந்து அணி 21 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் ஜேக்கப் ஓரம் பிரண்டன் மக்மிலன் ஆகியோர் அணியின் எண்ணிக்கையை சிறப்பாக விளையாடி உயர்த்தினர் எனினும் இறுதியாக ஆஸி அணி ஒருபந்து மீதமிருக்கையில் வெற்றியிலக்கை எட்டியது.

# பந்துவீச்சாளர் மாற்றம்

இம்மாத இறுதியில் சிறிலங்காவுக்கு வருகை தரவுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் ரிச்சர்ட் ஜோன்ஸன் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார். அவர் காயத்துக்கு உள்ளாகியிருப்பதே இதற்குக் காரணமாகும்.

அவருக்குப் பதிலாக மேலும் ஒரு வேகப் பந்து வீச்சாளரான ஜேம்ஸ் அண்டர்சன்னை சேர்த்துக்கொள்ள அந்நாட்டு கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. ரிச்சர்ட் ஜோன்ஸன் நடந்து முடிந்த பங்களாதேஷ் அணியுடனான 2வது டெஸ்ட் போட்டியில் 93 ஓட்டங்களைக் கொடுத்து 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றி ஆட்டநாயகன் விருது பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# சனாதிபதியின் பொறுப்பற்ற நடவடிக்கைக்காக

# மக்கள் வழங்கிய ஆணையிலிருந்து அரசு விலகாது



## சிறிலங்காப் பிரதமர் ரணில் தெரிவிப்பு

சனாதிபதியின் பொறுப்பற்ற கண்மூடித்தனமான நடவடிக்கைகளின் மூலம் சமாதானம், பாதுகாப்பு, பொருளாதார சுபீட்சம் என்பனவற்றுக்காக மக்கள் வழங்கியுள்ள ஆணையில் இருந்து அரசாங்கம் விலகமாட்டாது என்று பிரதம மந்திரி கூறியுள்ளார்.

மக்களின் சமாதான முயற்சியையும் பொருளாதாரசுபீட்சத்தையும் பாதிப்புக்குள்ளாக்குவதை அரசாங்கம் அனுமதிக்க மாட்டாதென்றும் அவர் கூறியுள்ளார். சர்வதேச சமூகத்தின் முழு ஆதரவுடன் சமாதானம், ஜனநாயகம், சுபீட்சம் ஆகியவற்றுக்காக மக்கள் வழங்கிய ஆணையை அமுல் செய்வதில் தாமே திடமாக செயற்படுவதாகவும் அமெரிக்காவிலிருந்து பிரதமர் ரணில் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார். மக்கள் ஆயதப்டைகள் பொலிசார் மற்றும் அரசசேவையினரை அமைதியாகவும் விழிப்புடனும் இருக்கும்படி அவர் கேட்டுள்ளார்.

## அமெ.சனாதிபதி புஷ்ஷை இன்று ரணில் சந்திப்பார்

சிறிலங்காப் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ்ஷை இன்று சந்திக்க இருக்கிறார். இரு தலைவர்களும் இருதரப்பு வர்த்தக பொருளாதார உறவுகள் அரசியல் தொடர்புகள் மற்றும் சமாதான முயற்சியை வலுப்படுத்துவது என்பன குறித்து கலந்துரையாட விருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இருதலைவர்களின் சந்திப்பு அமெரிக்காவுக்கும் சிறிலங்காவுக்கும் நட்புறவை வலுப்படுத்தும் நிகழ்வாக இருக்கிறதென்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். பிரதமர் அமெரிக்க ராஜாங்க பிரதி செயலாளர் போல்வில் போலக்கை நேற்று வாசிங்டனில் சந்தித்தார். பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்துவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாகவும் சிறிலங்காவின் பாதுகாப்பு விடயத்தில் அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் வழங்கும் உதவிக்கு ரணில் நன்றிதெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன்போதுவில் போர்லிக் தொடர்ந்து உதவி வழங்கப்படுமென உறுதியளித்துள்ளார்.

அமைச்சர் மிலிந்த மொறகொட வெளிநாட்டு செயலாளர் பேனாட் குணதிலக இலங்கைத் தூதுவர் சுபசிங்க ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

## ஊடகத்துறைக்கு அமுனுகம நியமனம்?

பொதுசன ஐக்கிய முன்னணிப் பேச்சாளர் சரத் அமுனுகம புதிய ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்படலாம் என பொதுசன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் எவரையும் அமைச்சராக நியமிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு என்றும் விரைவில் இந்த நியமனம் குறித்து அவர் அறிவிப்பாரென்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## உடன்பதிவு செய்க

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை நடாத்தும் மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி மிக விரைவில் நடைபெற இருப்பதனால் இதுவரை பதிவுகள் மேற்கொள்ளப் படாததால் கழகங்கள் இன்று மாலை 5.00 மணிக்கு முன் பதிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் இவ்விளையாட்டில் வெற்றிபெறும் முதல் அணிககுப் பணப் பரிசு பத்தாயிரம் ரூபா வழங்கப்படுவதுடன் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும், சிறந்த விளையாட்டு அணிக்கும் பரிசுகள் வழங்கப்படும் என விளையாட்டுத்துறை தெரிவித்துள்ளது.

## ராணுவம் தொடர்பான இரு ஒப்பந்தங்கள் அமெரிக்காவுடன் ரணில் கைச்சாத்து

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் தங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க அரசாங்கத்துடன் நேற்று பென்டகனில் இராணுவம் சம்பந்தமான இரு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைசசில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருடன் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த உடன்பாடுகளில் கையொப்பமிட்டுள்ளார்.

ஒரு உடன்படிக்கையின் படி சர்வதேச இராணுவ உதவிக்கான நிதி என்ற வரையறைக்குள் ஐந்து கோடி ரூபா நிதி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மற்றைய உடன்படிக்கை சர்வதேச இராணுவ உபகரண விற்பனை என்ற வரையறைக்குள் பத்துக் கோடி ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

அமெரிக்கா தனது நேச நாடுகளுக்கு நான்கு விதமான இராணுவ உதவிகளைச் செய்து வருகின்றது.

01) சர்வதேச இராணுவக் கல்வி மற்றும் பயிற்சி.

02) வெளிநாடுகளுக்கான இராணுவத் தளபாட விற்பனை.

03) வெளிநாடுகளுக்கான இராணுவத் தளபாடக் கடன் விற்பனை.

04) வெளிநாடுகளுக்கான இராணுவ நிதி. (32)

### அரச...

வுஸ் நிறுவனத்திற்கு கேசரலால் குணசேகரவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு கட்சன் சமரசிங்கவும் சனாதிபதியால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர். (32)

### மூன்று...

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக முன்னாள் பொலிஸ்மா அதிபர்சிறில் கேரத், மக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளராக திலக் ரணவிராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். உள்துறை அமைச்சின் செயலாளர் பதவியில் மாற்றமில்லை. எம். எம். யுனைற் தொடர்ந்தும் பதவி யிருப்பார்.

இதேவேளை, இவ் அமைச்சர்கள் வகிக்கும் ஏனைய அமைசசுப் பொறுப்புக்களில் அவர்கள் தொடர்ந்தும் இருப்பார்கள் என்றும், அதற்காக அவர்கள் மீண்டும் ஒருமுறை சனாதிபதியிடம் சத்தியப் பிரமாணம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிடம் தபால் தொலைத் தொடர்பு அமைச்சும், திலக் மாரப்பனவிடம் போக்குவரத்தும், ஜோன் அமரதுங்கவிடம் கிறிஸ்தவ மத விவகாரமும் இருப்பது தெரிந்ததே.

இதேவேளை, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இரு வாரங்களுக்கு பாராளுமன்றம் கூடுவதை சனாதிபதி சந்திரிகா ஒத்திவைத்துள்ளார்.

சனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் சனாதிபதியின் ஊடகத்துறைப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ கருத்துத் தெரிவிக்கையில், அரசியல் யாப்பின் பிரகாரம் தமக்குள்ள அதிகாரத்தின் கீழ் பாராளுமன்ற கூட்டத் தொடரை சனாதிபதி ஒத்திவைத்துள்ளதாக கூறியுள்ளார். இதனால், இம்மாதம் 19ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடும்.

நாட்டின் இறைமைக்கும், ஐக்கியத்திற்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பின் காரணமாக தேசிய ரீதியான சேவைகளைக் கருத்தில் கொண்டு இந்தத்தீர்மானங்களை எடுத்திருப்பதாக சனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமையை உன்னிப்பாக ஆராய்ந்த பின்னர் இந்தத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இந்த மாற்றங்கள் குறித்து உரிய நேரத்தில் சனாதிபதி விளக்க மளிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### இந்தியா...

இதேவேளை நாட்டின் தற்போதைய அரசியல் நிலை குறித்து ஆராய்வதற்கும் எதிர்காலத்தில் சிறி மு. காங்கிரஸ் எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து ஆராய்வதற்கும் நேற்று இரவு சிறிலங்கா மு. காங்கிரசின் உயர்பீடம் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளது. (32)

### 3 அமைச்சுகளின்...

தடவைகள் பொதுமக்களுக்கு அறிக்கைகள் மூலம் தெரிவித்து வந்துள்ளேன். நாட்டில் உள்ள சகல மக்களின் நலன் கருதி சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமாக இந்த இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு நான் சம்மதிக்கின்றேன். இந்த நாட்டின் அமைதியையும் சனநாயகத்தையும் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ளேன். அதே போல் இலங்கை வாழ் சகல இன மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் கடமைப் பட்டுள்ளேன்.

இந்த நாட்டின் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் இனத்தவர்களின உரிமைகளையும் அவர்களின் பாதுகாப்பையும் வழங்கி அவர்களுக்கு சுதந்திரத்தைக் கொடுப்பதற்குத் தயாராக உள்ளேன்.

நாட்டின் ஐக்கியத்துக்குள் கட்டுப்பட்டு நல்லதொரு தீர்வை விடுதலைப்புலிகள் கொண்டு வருவார்களானால் அவர்களோடு நான் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயாராக உள்ளேன். இந்த இனப்பிரச்சினைக்கு நாட்டின் சகல மக்களினதும் பூரண ஆதரவையும் ஒத்தழைப்பையும் வேண்டிக் கொள்கின்றேன். நாட்டின் இனத்துவேசத்தைக்காண்பிக்காமல் சகலரும் அமைதியாக இருக்கும்படி எல்லா மக்களையும் இத்தருணத்தில் வேண்டிக் கொள்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

## பதவி பறிக்கப்பட்ட அமைச்சர்கள்



திலக் மாரப்பன ஜோன் அமரதுங்க பாக்கீர் மாக்கார்

## எந்த நேரத்திலும் தேர்தலுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தயார்

### அமைச்சர் ரவூப் ஹக்கீம்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தக் காலகட்டத்தில் எடுத்திருக்கும் இம்முயற்சிதுரதிஷ்டவசமானது இதற்கு அடுத்த கட்டமாக நடக்கவிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. என முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறி யுள்ளார். அவர்மேலும் தெரிவிக்கையில், முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் எந்த நேரத்திலும் தேர்தல் ஒன்றை சந்திக்கத்தயாராக வுள்ளனர். முஸ்லிம்களுடைய அதிகாரப்கிர்வு அலகை வலியுறுத்தி மீண்டும் ஒருமுறை மக்களுடைய ஏகோபித்த ஆணையைப் பெறும் சந்தர்ப்பமாக இது அமையும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்கக்கீம் கூறினார்.

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்திக் குழு சனாதிபதி சந்திரிகாவுக்கு முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

## ஆவணங்கள் இல்லாத உந்துருளிகளைப் பதிதல்

(அலுவலக செய்தியாளர்)

ஆவணங்கள் இல்லாது பாவனையிலுள்ள உந்துருளிகளை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் இன்று முதல்15ஆம் திகதி வரை கிளிநொச்சி மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பதிவுகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான ஆவணங்கள் கீழ் தரப்பட்டுள்ளன. 1. விண்ணப்பப்படிவம் எம். ரி. எ2, 2.கிராம சேவை அலுவலர் ஊடாக பிரதேச செயலரினால் உறுதிப்படுத்தப்பெற்ற கடிதம் மற்றும் சமாதான நீதவானினால் உறுதிப்படுத்தப்பெற்ற கடிதம், இவற்றிற்கான படிவங்களை மோட்டார். போக்குவரத்து உதவி ஆணையாளர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

3. கிராமசேவை அலுவலரினால் உறுதிப்படுத்தப்பெற்ற கறுப்பு வெள்ளை புகைப்படத்துடன் தேசிய அடையாள அட்டையின் பிரதியினை கி.சே.அலுவலர் உறுதிப்படுத்தியிருத்தல்வேண்டும்.

4. மேற்படி பதிவுக்கான கட்டணமாக 475/= செலுத்தப்படுதல் வேண்டுமெனவும் யுத்தநெருக்கடிகாரணமாக உந்துருளிகளைப் பதிவுக்குட்படுத்த தவறியவர்கள் மேற்குறிக்கப்பட்ட தினங்களில்சமுகம் கொடுத்து பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)

- கிளி.மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் நடாத்தும் -

## காக்கை வலிப்புக்கான இலவச வைத்திய சேவை

கிளி. ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் கடந்த ஆடி மாதம் நடாத்திய காக்கை வலிப்புக்கான தொடர் சிகிச்சை இன்று ஜெயபுரம் ஊன முற்றோர் சங்க தொடர்பகத்தில் காலை 9.30 மணிக்கும் 7.11.2003 கிளி. மாவட்ட வைத்தியசாலையில் காலை 9.30 மணிக்கும் நோர்வே நாட்டில் இருந்து வருகை தந்திருக்கும் வைத்திய கலாநிதி பிறிவிக் (நரம்பியல் நிபுணர்) என்பவரால் நடைமாடும் இலவச வைத்திய சேவை நடைபெறவுள்ளது. இதில அங்கத்தவர்களைக் கலந்து கொண்டு பயன் பெறுமாறு சங்கம் கேட்டுள்ளது.

### வீரவணக்கம்...

போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### அதிதீவிர...

ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பல இராணுவப் படைப் பிரிவுகள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், பாராளு மன்றக் கட்டத் தொகுதி அரச அச்சு கக் கூட்டுத்தாபனம், அரச தொலைக காட்சி, வானொலி, தொலைத் தொடர்பு சேவை மின் உற்பத்தி நிலையங்களுக்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஏற்படக் கூடிய இடையூறுகளைத் தவிர்ப்பதற்காகவே படையினர் நிறுத்தப் பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

### ஐ.தே.க...

கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

11 ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே தமது ஆதரவை இதற்குத் தெரிவித்திருப்பதாகவும் பல ஐ.தே.க.பாராளுமன்ற உறுப் பினர்கள் பாராளுமன்றத்தை ஒத்தி வைக்கக் கோரியுள்ளதாகவும் பொது சன ஐக்கிய முன்னணி கூறுகின்றது.

இதேவேளை அடுத்த கட்ட நகர்வு குறித்து ஆராயப் பொதுசன ஐக்கிய முன்னணியினர் நேற்றிரவு சனாதிபதி மாளிகையில்கூடவிருந்தனர்.

### புலிகளின்...

சம நிலையைப் பேண வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார். சிறிலங்காப் பிரதமரை வாஷிங்டனில் சந்தித்த பின்பே இக்கூற்றை அவர் தெரிவித்தார். 1980 காலப் பகுதிகளில் நடுநிலையான தீர்வைக் கொண்டு வருவதில் இந்தியா பாடுபட்டுள்ளது என ஆர்மிரேஜ கூறினார். அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளால் கையளிக்கப்பட்ட நகல் திட்டம் அர்த்தமுள்ளதும் சமாதானத்தில் அவர்களுடைய அவாவையும் வெளிப்படுத்துவதாகவும் நான் நினைக்கின்றேன்எனவும் அவர் கூறினார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003.ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5.ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.